1970 மார்ச் 13]

யுள்ள 60 ஏக்கர் நிலத்தை விற்கும்போது, மேற்கண்ட செலவுகளை யும் சேர்த்து, 40 ஏக்கர் பொது விஷயங்களுக்கான நிலத்தின் கிரயத்தையும் சேர்த்து போட்டு விற்க வேண்டியிருக்கிறது. 40 ஏக்கர் நிலம் பொதுவிஷயங்களுக்கு விடப்படுவதால் அதன் கிரயத்தை மற்ற 60 ஏக்கர்களில் சேர்த்து வாங்கவேண்டியிருக்கிறது. ஆகவே, குறைந்த விலைக்கு வாங்கி அதிக விலைக்குக் கொடுக்கிறார்கள் என்று சொல்வது நல்லதல்ல. இதில் 'நோ லாஸ், நோ கெய்ன்'.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, வீட்டுவசதி வாரியம் வீட்டு மனைகளை ஒதுக்குகிறார்கள். அதற்கு வேண்டிய பணத்தை கட்டிவிட்ட பிறகும், அந்த நிலத்தைப்பற்றிய வழக்குகள் நீதி மன்றத்தில் இருப்பதால், வீட்டுமனையை ஹேண்ட் ஓவர் செய்வதில் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே, பணம் செலுத்தியவர்களுக்கு மாற்று மனைகளை வழங்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, கேள்வியிலேயே விடையையும் சொல்லி விட்டார்கள். அப்படிப்பட்ட நிலைமை ஏற்படுவதற்கு வழக்குகள் நீதிமன்றத்தில் இருப்பதுதான் காரணம் என்று உறுப்பினர் அவர்களே சொல்லி விட்டார்கள். அப்படிப்பட்ட நிலைமை தோன்றாமலிருக்க நிலச் சொந்தக்காரர்கள் வழக்கு மன்றத்திற்குப் போகாமல் இருந்தால் நல்லதாக இருக்கும். வழக்குகள் நீதி மன்றத்தில் இருக்கும் காரணத்தால் வழக்கு முடிந்த பிறகுதான் நிலம் கொடுக்கமுடியும். மாற்று மனை கொடுக்கலாமே என்று குறிப்பிட்டார்கள். அப்படி மாற்றுமனைச் சொந்தக்காரர்களும் வழக்கு மன்றத்திற்குப் போகமாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்.

பஞ்சாயத்து தெரு விளக்குகளுக்கு மின் கட்டணம்

* 367 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பஞ்சாயத்து தெரு விளக்குகள் எரிந்தாலும் எரியாவிட்டாலும் குறிப்பிட்ட தொகை கட்ட வேண்டும் என்று வலியுறுத்தப் படுகிறதா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, பஞ்சாயத்தின் பராமரிப்பிலுள்ள தெருவிளக்குகள் எரிவதற்கு மாதத்திற்கு இவ்வளவு தொகை கட்ட வேண்டும் என்று இருப்பதை மாற்றி, ஒவ்வொரு பஞ்சாயத்திலும் மீட்டர் பொருத்தி யூனிட் அடிப்படையில் கட்டணம் வசூலிக்க நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ? சில விளக்குகள் பாதி நாட்கள் எரியாமல் இருக்கின்றன. ஆகவே, யூனிட் அடிப்படையில் கட்டணம் வசூலிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, நான் விடையிலேயே கூறியிருக்கிறேன், விளக்கு எரிந்தாலும் எரியாவிட்டாலும் குறிப்பிட்ட கட்டணம் கட்டவேண்டுமென்று வலியுறுத்தப்

படவில்லையென்று. மாதத்திற்கு பத்து நாட்களுக்கு விளக்குகள் எரியவில்லையென்று புகார் வந்தால், அதுபற்றி கட்டணம் குறைத்துக்கொள்ளப்படும்.

Report of National Commission on Labour

* 368 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) Whether the Government are aware of the report of the National Labour Commission presented to the Union Government; and

(*b*) if so, whether a copy of the report will be placed on the Table of the House ?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : (அ) ஆம். மேற்கண்ட தொழிலாளர் பற்றிய தேசிய ஆணைக்குழுவின் அறிக்கையை ஆய்வதற்கு டில்லியில் நடந்த தொழிலாளர் அமைச்சர்கள் மாநாட்டில் நானும் பங்குகொண்டு நம் அரசாங்கத்தின் பரிந்துரைகளைக் கூறியிருக்கிறேன்.

(இ) இவ்வறிக்கை ஐந்நூறுக்கும் மேற்கொண்ட பக்கங்களைக் கொண்டதாக இருப்பதால் அவையின் முன் வைக்க இயலவில்லை. உறுப்பினர்களின் பார்வைக்காக சில நகல்கள் சட்டப் பேரவையின் நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : தலைவர் அவர்களே, இந்தக் கமிஷனுடைய அறிக்கை டேபுளின்மேல் வைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, நான் முன்பு சொன்னதுபோல இந்த அறிக்கை 500 பக்கங்களைக் கொண்டதாக இருக்கிறது. இந்த அறிக்கையை மத்திய அரசாங்கம் வெளியிட்டிருக்கிறது. நம்முடைய மாநிலத்திற்கு சில பிரதிகள் பெறப்பட்டிருக்கின்றன. முப்பத்து நான்கு லட்சம் ரூபாய் செலவில் மூன்று ஆண்டுகள் முயன்று தயாரிக்கப்பட்ட அறிக்கை. இது பெரிய அளவில் இருப்பதாலும், அதிக பக்கங்களைக் கொண்டதாக இருப்பதாலும் அவை முன் வைக்க சாத்தியம் இல்லை. சட்டப் பேரவையின் நூலகத்தில் பேரவை உறுப்பினர்களுடைய பார்வைக்காக வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, அந்த அறிக்கை எல்லோருக்குமே மேஜைமேல் வைக்க முடியவில்லையென்றாலும், கட்சி அடிப்படையிலாவது இரண்டு புத்தகங்களாவது கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, இந்தப் புத்தகம் மத்திய அரசாங்கத்தின் தொழிலாளர் துறை வெளியிட்டிருக்கிறது. நம்முடைய மாநிலத்திற்கென்று சில பிரதிகள்தான் அனுப்பியிருக்கிறார்கள். ஆகவேதான் பேரவை உறுப்பினர்களின் பார்வைக்காக சட்டப் பேரவை நூலகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.